மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
பயிற்சிப் பரீட்சை -05

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

5

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் **(வகுப்பாசிரியர்)** **புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம்**
இரண்டாவது பரீட்சகர் **(.....)** **முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம**
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் **மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம்**
அதிபர் **மேர்பாற்வை செய்தேன்**	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


- 1,2 ஆகிய வினாக்களில் கட்டத்தில் உள்ள சித்திரத்திற்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரத்தைத் தெரிவு செய்க

1.






(1)



(2)



(3)

2.





(1)




(2)




(3)

- 3,4 ஆகிய வினாக்களுக்கு ஒரே கூட்டத்தைச் சேர்ந்த உருக்கள் இடம்பெறும் மிகப் பொருத்தமான அடைப்பினைத் தெரிவு செய்க.

3.



(1)




(2)




(3)


4.



(1)





(2)





(3)

5. தரப்பட்டுள்ள உருக்களில் உள்ள தொடர்பின் மூலம் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கலாம் அவ்வாறு பிரிக்கும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.










(1) AC உம், BD உம் (2) AD உம், BC உம் (3) AB உம், CD உம்

சுட்டெண் :.....

6. தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

7. உரு A இற்கு உரு B எனின், உரு C இற்கு பொருத்தமான உரு எது?




உரு A உரு B உரு C .....



(1) (2) (3)

8. ஊடு காட்டும் தாளில் வரையப்பட்ட உரு X இன் மீது உரு Y இனை வைக்கும் போது தோன்றும் உரு எது?



உரு X உரு Y (1) (2) (3)

9. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது யாது?

வீட்டில் விரும்பி வளர்க்கப்படும்
தானியங்களை உண்டு பசிதீர்க்கும்
பல்வகையிலும் பரந்திருக்கும்
வெண்ணிறத்திலும் காணப்படும்.


(1) புறா (2) அன்னம் (3) கொக்கு

www.keau.lk

10. அடுத்து வரும் ஐந்து எண்களில் மிகச் சிறிய எண்ணினதும் மிகப் பெரிய எண்ணினதும் கூட்டுத்தொகை 92 ஆகும். அந்த ஐந்து எண்களில் நான்காவதாக அமைந்துள்ள எண் யாது?

(1) 47 (2) 44 (3) 48

11. தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் வெற்று அடைப்பிற்குப் பொருத்தமான உருவினைத் தெரிவு செய்க






(1)



(2)



(3)

12. 

உருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகளில், அரைவாசி நிழற்றப்பட்டதாக.....

(1) மூன்று முக்கோணிகள் உள்ளன.
(2) ஒரு முக்கோணி உள்ளது.
(3) இரண்டு முக்கோணிகள் உள்ளன.


13. A,B,C,D ஆகிய ஒவ்வொரு ஈர்க்குத் துண்டுகளின் அளவுகள் காட்டப்பட்டுள்ளன.

A= 3cm	B= 5cm	C= 9cm	D= 4cm

இந்த ஈர்க்குத் துண்டுகளின் முனைகள் பொருந்தக்கூடிய வகையில் முக்கோணி ஒன்றை அமைக்கக்கூடிய ஈர்க்குத் துண்டுகள் எவை?


(1) A,B,D (2) A,B,C (3) B,C,D

14. தரப்பட்ட உருவின் சதுரப் பகுதியுடன் அதே வடிவமான இன்னொரு உருவின் சதுரப்பகுதி பொருந்துமாறு இணைக்கும் போது பெறப்படும் திண்ம உருவில் காணக்கூடிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது?



(1) 16 (2) 14 (3) 12

15. மாணவன் ஒருவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற பாதையினை உரு காட்டுகின்றது. அவன் பாடசாலை முடிவடைந்து வீட்டிற்குச் செல்லும்போது எத்தனை தடவைகள் தென்மேற்குத் திசைப் பக்கமாகத் திரும்பியிருப்பான்.



(1) மூன்று (2) நான்கு (3) ஐந்து

16. தரம் 5 மாணவர்கள் சிலர் வகுப்பறைக்கு வந்தமை தொடர்பான மூன்று கூற்றுக்கள் A,B,C எனத் தரப்பட்டுள்ளன

A : தரம் 5 வகுப்பில் 22 மாணவர்கள் உள்ளனர்.


B : 12 மாணவர்கள் காந்தனுக்குப் பின்னர் வகுப்பறைக்கு வந்தனர்.

C : வகுப்பறையில் உள்ள பெண் பிள்ளைகள் அனைவரும் காந்தனுக்கு முன்னர் வகுப்பறைக்கு வந்தனர்.

எனின், வகுப்பறையில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 10 இலும் குறைவானது என்பதனைத் தீர்மானிப்பதாக அமையும் கூற்றுக்கள் எவை?

(1) A உம், B உம் (2) B உம், C உம் (3) A உம், B உம், C உம்

17. தரப்பட்டுள்ள எண் கோலத்தில் புள்ளிக்கோட்டில் இடம்பெற வேண்டிய எண் யாது?




(1) 7 (2) 4 (3) 3

18. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய மூன்று பெட்டிகள் அருகருகே உள்ளன. அவற்றுள் அன்னாசி, பப்பாசி, திராட்சை ஆகிய பழங்கள் வைக்கப்பட்டுள்ளன. அன்னாசி இருக்கும் பெட்டிக்கு முன்னால் சிவப்புப் பெட்டி உள்ளது. மஞ்சள் பெட்டிக்குள் அன்னாசி இல்லை எனின், பச்சைப் பெட்டிக்குள் இருப்பது யாது?

(1) பப்பாசி (2) திராட்சை (3) அன்னாசி

19. கீழே, உரு 1, உரு 2 ஆகியவற்றில் உள்ள மூன்று பக்கமும் சம அளவான இரண்டு முக்கோணிகளின் ஒரு பகுதி ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு ஒட்டப்பட்டுள்ள விதம் உரு 3 இல் நிழற்றப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. உரு 3 இல் நிழற்றப்பட்ட பகுதியை சுற்றிவர உள்ள நீளம் 8cm எனின், அவ்வுருவினைச் சுற்றிவர உள்ள நீளம் யாது?

உரு 1 உரு 2 உரு 3



(1) 28cm (2) 32cm (3) 36cm


20. குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூபாய் 26.00 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 2 (3) 1

21. அருணிடம் இருந்த பணத்தைவிட தருணிடம் 45 ரூபாய் அதிகமாகவும் தருணிடம் இருந்த பணத்தை விட வருணிடம் 15 ரூபாய் குறைவாகவும் இருந்தது. தருண் அருணிடம் 25 ரூபாவைக் கொடுத்த பின்னர் மூவரிடமும் உள்ள பணத் தொகைக்கு ஏற்ப ஏறுவரிசைப்படுத்திக் காட்டும் விடை எது?

(1) தருண், வருண், அருண் (2) வருண், அருண், தருண் (3) தருண், அருண், வருண்

22. ஒவ்வொன்றும் தொடர்ச்சியான ஆங்கில எழுத்துக்கள் உள்ள 10 பெட்டிகளைக் கொண்ட இரண்டு புகையிரதங்கள் சம அளவான வேகத்தில் ஒன்றையொன்று கடந்து செல்லும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது.



1வது புகையிரதத்தின் பெட்டி E ஐ 2வது புகையிரதத்தின் பெட்டி N சந்திக்கும் போது 1வது புகையிரதத்தின் பெட்டி A ஐ சந்திக்கக்கூடிய 2வது புகையிரதத்தின் பெட்டி யாது?

(1) பெட்டி H (2) பெட்டி K (3) பெட்டி J

23. கத்தரிக்குப் பின்னர் மிளகாயும் மிளகாய்க்குப் பின்னர் தக்காளியும் என்ற ஒழுங்கில் செடிகள் நடப்பட்டுள்ளன. அவற்றில் கத்தரி மற்றும் தக்காளிச் செடிகள் சம எண்ணிக்கையில் அமைந்துள்ளன. செடிகளின் இறுதியில் தொடர்ச்சியாக மூன்று மிளகாய்ச் செடிகள் உள்ளன. நடப்பட்ட செடிகளின் மொத்த எண்ணிக்கை 84 எனின், அங்கு நடப்பட்ட மிளகாய்ச் செடிகள் எத்தனை?

(1) 27 (2) 30 (3) 33

24. வனஜா தன்னிடமுள்ள பணத்தில் அரைவாசியைத் தாயிடம் கொடுத்தாள். மீதமுள்ள பணத்தில் அரைவாசியைத் தம்பியிடம் கொடுத்தாள். தற்போது வனஜாவிடம் ரூபாய் 75.00 உள்ளது எனின், ஆரம்பத்தில் வனஜாவிடம் இருந்த பணம் யாது?

(1) ரூபாய் 300.00 (2) ரூபாய் 600.00 (3) ரூபாய் 1200.00

25. அருகில் உள்ளவாறு சதுரமுகி வடிவிலான பெட்டியானது சம அளவான இரண்டு சிவப்பு நிற நாடாக்களினால் சுற்றி ஒட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நாடாவை ஒட்டுவதற்கு 48cm நாடா தேவைப்பட்டது எனின், சதுரமுகிப் பெட்டியின் உயரம் யாது?




(1) 8 cm (2) 6 cm (3) 7 cm


26. மணி அடிக்கும் போது A எனும் நூலகத்திலுள்ள ஒவ்வொரு 9 மாணவர்களுக்கு 3 மாணவர்கள் எனும் அடிப்படையில் நூலகத்திலிருந்து வெளியே செல்வார்கள். குறித்த மணி அடித்ததன் பின்னர் நூலகத்தில் எஞ்சியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 42 எனின், நூலகத்திலிருந்து மொத்தமாக எத்தனை மாணவர்கள் வெளியே சென்றுள்ளனர்?

(1) 28 (2) 21 (3) 42


27. கீழே மூன்று வடிவங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சதுரமுகி ஒன்றினை அமைக்கக்கூடிய வடிவம் எது?



(1)



(2)



(3)

28. **1*l*** எரிபொருளில் 25km தூரம் பயணம் செய்யக்கூடிய முச்சக்கர வண்டியும் **1*l*** எரிபொருளில் 40km தூரம் பயணம் செய்யக்கூடிய மோட்டார் வண்டியும் A எனும் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 100km தூரம் பயணம் செய்து B எனும் இடத்தினை அடைந்தன. பின்னர் B எனும் இடத்தில் மோட்டார் வண்டி தரித்து நின்றது. முச்சக்கர வண்டி மட்டும் மீண்டும் A எனும் இடத்தினை வந்தடைந்தது எனின் இரண்டு வாகனங்களும் தங்களது பயணத்திற்காகச் செலவிட்ட எரிபொருளின் மொத்த அளவு யாது?

(1) 13*l* (2) 8*l* 500*ml* (3) 10*l* 500*ml*

29. நான்கு இலக்க எண்ணொன்று உள்ளது. அந்த எண்ணில் உள்ள இலக்கங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. 352 எனும் எண்ணின் மூன்று மடங்காக வரும் எண்ணில் உள்ள இலக்கங்களும் இல்லை. அந்த எண் யாது?

(1) 8974 (2) 8970 (3) 8077


30. கமல் டனுஜனின் சகோதரனாவார். டனுஜன் பானுவின் தந்தையாவார். பானுவும் தனுவும் சகோதரிகள் எனின், தனுவுக்கு கமல் என்ன உறவு?

(1) மகள் (2) பெரியப்பா (3) மாமா


31. வியாபாரி ஒருவர் மூன்று பெட்டிகளில் பந்துகளை அடுக்கி வைத்துள்ளார்.

- அப்பெட்டிகள் ஒவ்வொன்றிலும் உள்ள பந்துகளில் ஒரு பந்து நிறை கூடியதாகும்.
- அப் பந்துகளைத் தட்டுத் தராசில் நிறுக்கும் போது படிகளைப் பயன்படுத்த முடியாது.
- ஒவ்வொரு தடவையும் நிறுப்பதற்கென தெரிவு செய்யப்பட்ட பந்துகள் அனைத்தும் தராசில் போட்டு நிறுக்கப்படல் வேண்டும்.


இவ்வாறு மூன்று தடவைகள் மட்டும் தட்டுத் தாரசினைப் பயன்படுத்தி நிறை கூடிய பந்தை நிறுத்தெடுக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ள பெட்டி எது?



(1)



(2)




(3)

32. குறித்த வருடம் ஒன்றில் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்படும் நாளானது அவ்வருடத்தின் எத்தனையாவது நாளாகும்.

(1) 33 (2) 34 (3) 35

33. உருவில் தரப்பட்டுள்ள பெரிய சதுரமுகிக் குற்றியில் இருந்து முறி கோட்டினால் காட்டப்பட்டுள்ள சிறிய கனவுருக் குற்றி வெட்டி நீக்கப்பட்டது. பின்னர் எஞ்சிய குற்றியில் இருந்து ஒரு பக்க நீளம் 1cm அளவுடையதாக வெட்டக்கூடிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 190 (2) 192 (3) 194

34. கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பினைக் கருத்திற் கொள்ளாது தற்காலத்தில் கப்பல் போக்குவரத்து சேவைகள் இடம் பெறுகின்றன. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் பல அழிவடைந்து கரை ஒதுங்குகின்றன. மக்களும் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர்.
மேலே தரப்பட்ட கூற்றுக்களினால் உணர்த்தப்படுவது

(1) கடல் வாழ் உயிரினங்களுக்கு உணவு கிடைக்காமை.


(2) நீர் நிலைகளில் இரசாயனக் கழிவுகள் அதிகரிக்கின்றமை.

(3) கடல் வாழ் உயிரினங்கள் கடலில் வாழ விரும்பியமை.

35. ஒரு மீன் தொட்டியில் 4 மீன்கள் இருந்தன. அவற்றில் ஒரு மீன் 5 குஞ்சுகளைப் பொரித்தது. மற்றொரு மீன் 16 குஞ்சுகளைப் பொரித்தது. இன்னொரு மீன் அங்கிருந்த 3 குஞ்சுகளை விழுங்கியது. குஞ்சுகளை விழுங்கிய அந்த மீனைக் கொக்கு ஒன்று பிடித்துச் சென்றது. எனின், தற்போது மீன் தொட்டியில் எத்தனை மீன்கள் உள்ளன.

(1) 20 (2) 21 (3) 15

36. கட்டத்திலே சில இலக்கங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட எண்களின் வடிவம் ஒன்று ஆங்கில எழுத்துக்களின் குறியீடுகளில் தரப்பட்டுள்ளது. இதில் ஆங்கில எழுத்து O ஆக இருக்க முடியாத இலக்கம் எது?




(1) 3 (2) 2 (3) 4


37. ஐந்து நேர்கோடுகளால் இணைக்கப்பட்ட நட்சத்திர வடிவப் பூம்பாத்தி ஒன்று உள்ளது. அந்தப் பூம்பாத்தியில் ஒரு நேர்கோட்டு வரிசையிலே, நேர்கோடுகள் இணையும் இடங்களில் ஒவ்வொன்று வீதம் நான்கு ரோஜாச் செடிகள் காணப்படுகின்றன. எனின், அப்பூம்பாத்தியில் காணப்படுகின்ற ரோஜாச் செடிகளின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 10 (3) 25


38. கண்ணாடிப் பாத்திரம் ஒன்றினுள் 100*ml* மண்ணெண்ணெயும் அதன் இரண்டு மடங்கு தேங்காய் எண்ணெயும் தேங்காய் எண்ணெயின் இரண்டு மடங்கு நீரும் இடப்பட்டது. சிறிது நேரத்தின் பின் பாத்திரம் தென்படும் சரியான முறை பின்வருவனவற்றுள் யாதாக அமையும்?



(1)



(2)



(3)

39. பருவமழை உரிய காலத்தில் பெய்தமையால் நெற்பயிர்கள் செழித்து வளர்ந்தன. இக் கருத்தை விளக்கும் சரியான கூற்று.

(1) பருவ மழை பெய்யா விடினும் நெற்பயிர்கள் செழித்து வளரும்.
(2) நெற்பயிர்கள் செழித்து வளர வளமான மண்ணே காரணமாகும்.
(3) நெற்பயிர்கள் செழித்து வளரப் பருவ மழையே காரணமாகும்.

40. கதை ஒன்று ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் இலக்க ஒழுங்கினைத் தெரிவு செய்க.

1. ஒரு நாள் ஆறு பெருக்கெடுத்தபோது மண் கரையக்கரைய வேரூன்றி நிற்க முடியாமல் அரச மரம் ஆற்றுக்குள் சாய்ந்தது.
2. ஆற்றங்கரையில் நின்ற அரசமரம் ஆற்று நீரால் வானுறவோங்கித் தலை நிமிர்ந்து நின்றது.
3. அரசமரம் கூறியதை ஏனைய மரங்கள் ஏற்றுக்கொள்ள முடியாமல் நின்றன.
4. "ஆற்றங்கரை வாழ்வும் அவ்வளவு தான்!" என்று கூறி அரசமரத்திற்காகப் பரிதாபப்பட்டன.
5. ஏனைய மரங்களைப் பார்த்து "நான் உங்களுக்கெல்லாம் தலைவன்!" என்று கூறியது.

(1) 2 , 5 , 3 , 1 , 4 (2) 1 , 2 , 3, 4 , 5 (3) 2 , 4 , 3 , 1 , 5

★★★★★

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை -5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

5

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

அவை அழகான கோழிக்குஞ்சுகள். தோட்டத்தில் அங்குமிங்கும் உலவித் திரிந்தன. கொக்...கொக்... என்று சத்தமிட்டன. தமது சிறிய சிறகுகளை அடித்தவாறு தாயின் பின்னே விரைவாக ஓடின. பசுத்தோல் போர்த்த புலி போல உலவும் விலங்குகளால் ஆபத்து என்பதை அவை அறியவில்லை. தொடர்ந்து அக்குஞ்சுகள் பசும் புல்வெளிக்குச் சென்று உலவின. அதனைப் புல்வெளிக்கு அப்பாலே உள்ள பற்றைக்குள் இருந்த கீரி பார்த்தது. அவற்றைப் பிடிக்க நினைத்து வேகமாகத் துரத்தத் தொடங்கியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. தோட்டத்தில் உலவித் திரிந்தவை எவை?

.....

ii. பந்தியில் உள்ள இணைமொழி ஒன்றினைத் தருக.

.....

iii. பந்தியில் உள்ள உவமைத்தொடர் யாது?

.....

iv. ஒலியெழுப்பின என்பதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

v. பந்தியில் இடம்பெற்றுள்ள சினைப் பெயர்ச் சொல் ஒன்றைத் தருக.

.....

vi. இப் பந்தியில் கூறப்படாத கருத்தின் கீழ்க் கோடிடுக.

(1) கோழிக்குஞ்சுகள் தோட்டத்தில் உலவித் திரிந்தன.

(2) கோழிக்குஞ்சுகள் புல்வெளியில் உலவித் திரிந்தன.

(3) கீரி புல்வெளியில் உலவித் திரிந்தது.

2. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக்கி எழுதுக.

நான் கடைக்குச் சென்றேன்.
நான் புத்தகம் வாங்கினேன்.

.....

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக

மனனம் / ஆத்திசூடியானது / செய்யக்கூடிய / வகையில் / சிறுவர்களும் / எவ்வயதுச் / சிறுசிறு / அமைந்துள்ளது / சொற்றொடர்களாக

.....

.....

4. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி மீண்டும் எழுதுக.

i. நாங்க வீட்டை போறம்.

.....

ii. அவையள் என்ர புதிய புத்தகத்த வேண்டினார்கள்.

.....

www.ikeau.lk

சுட்டெண் :.....

5. **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

மலரவா நீ வீட்டு வேலைகளைச் செய்தாயா

6. **பின்வரும் ஒவ்வொரு கருத்தினையும் உணர்த்தும் பொருத்தமான மரபுத் தொடரினைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

i. அலைத்து வருத்துதல் .....

ii. மனம் நோகப் பேசுதல் .....

7. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i. நானும் தம்பியும் பூங்காவிற்குச் சென்று விளையாடினோம். ( )

ii. மயில் குழாம் அழகாகத் தோகை விரித்து ஆடின. ( )

iii. எமக்கு கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள் போன்றது. ( )

iv. மரத்தினது இலைகள் கீழே விழுந்தன. ( )

8. **பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

காலம் மாறி வரும்.

.....

9. **பின்வரும் ஒருமை வாக்கியங்களை எதிர்காலப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

i. மீன் நீரில் வாழ்கின்றது.

.....

ii. பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைத் தருகிறது.

.....

10. **பின்வரும் ஒவ்வொரு ஆத்திசூடி வரிகளையும் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.**

i. தேசத்தோடு ஒட்டி .....

ii. இணக்கம் அறிந்து .....

11. **ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i. Nurse ..... ii. Moon .....

12. **ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





i. .....

ii .....

www.ikedu.lk

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

i. I / paddy field / in / work / the

……

ii. want / buy / to / We / a / shirt

……

14. 'புஸ்தகாலய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எனக்கு பிட்டுத் தாருங்கள்.

……

16. இருபத்தொன்பதாயிரத்து தொண்ணூறு என்னும் எண்ணிலிருந்து ஒன்றைக் கழிக்கும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

……

17.

5306, 5630
5603, 5063

கட்டத்தில் தரப்பட்டுள்ள எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.


……, ……, ……, ……,

18. 

கட்டத்தில் உள்ள உருக்களின் எண்ணிக்கையை உரோமன் எண் குறியில் தருக

……

19. தரப்பட்ட உருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணில் எழுதுக.



……

20. தை மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

வாகன வகை	**A**	**B**	**C**
எண்ணிக்கை	**2435**	**1838**	**910**

i. தை மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட வாகன வகை A, C என்பவற்றின் மொத்த எண்ணிக்கை யாது?

……

ii. வாகன வகை B ஐ விட வாகன வகை A எவ்வளவு கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளது?

……


21. 428 இனை 4 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?

……

22. ஒரு குவளையில் 1*l* 175m*l* பானம் உள்ளது. அவ்வாறான 7 குவளைகளில் உள்ள பானத்தின் மொத்த அளவு யாது?

……*l* ……m*l*

www.ikedu.lk

23. 

இவ்விரிப்பை மடித்து இணைக்கும் போது கிடைக்கும் திண்ம உருவின் பெயர் யாது?

.....


24. சர்வான் ஓரிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு நோக்கி 50m தூரம் சென்று தனது இடது பக்கமாகத் திரும்பி 100m தூரம் சென்று கோயிலை அடைந்தான். சர்வான் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து கோயில் எத் திசையில் அமைந்துள்ளது?

.....

25. படத்தில் உள்ள பென்சிலின் நீளம் யாது?



.....cm

26. 

இவ்வுருவில் உள்ள சமச்சீர் அச்சுகள் எத்தனை?

.....


27. மு.ப. 8.30 மணிக்குத் துண்டிக்கப்பட்ட மின்சாரம் பி.ப. 3.00 மணிக்கு மீண்டும் வழங்கப்பட்டது எனின், மின்சாரத் துண்டிப்பு ஆரம்பமாகிய நேரத்தினை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரம் காட்டும் விதத்தில் தருக.

.....

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	1 kg இன் விலை		அளவு	விலை	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
அரிசி	220	00	1500g	i)	.....
மா	ii)	.....	300g	63	00
சீனி	325	00	500g	iii).....	.....
மொத்தம்				iv)	.....

29. ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் விரும்பும் பாடங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



i. தமிழ்ப் பாடத்தினை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 7 ஆகும். அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

ii. ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

www.ikedu.lk

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


30. மொரட்டுவ பல்கலைக்கழக வேந்தராகவும் இங்கிலாந்து அரச வானியலாளர் கழக அங்கத்தவராகவும் பணியாற்றியவர்
(1) கலாநிதி ரீ.பீ.ஜாயா (2) ஆதர்.சி.கிளாக் (3)கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி

31. சேதனப்பசளையைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களில் ஒன்று,
(1) உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேர்தல்.
(2) நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருள் கிடைத்தல்.
(3) புற்றுநோய் ஏற்படுத்தல்.

32. மாசடைந்த நீரைப் பருகுவதால் ஏற்படக் கூடிய நோய்களை மாத்திரம் கொண்டமைந்த விடை.
(1) ஈரலழற்சி, செங்கண்மாரி, நீரிழிவு
(2) வயிற்றோட்டம், வாந்திபேதி, மஞ்சட்காய்ச்சல்
(3) டெங்கு,கழிச்சல், தொண்டைக்கழலை

33. கால்களற்ற பிராணிகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?
(1) மண்புழு, மீன், மரவட்டை
(2) மண்புழு, பூரான், பாம்பு
(3) பாம்பு, மண்புழு, மீன்

34. தரப்பட்டுள்ள பரிசோதனையின் போது வெள்ளை நிறமுள்ள தடித்த கடதாசியில் தென்படக்கூடிய நிறங்களை மட்டும் உள்ளடக்கிய விடை



(1) சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம்
(2) சிவப்பு, கருநீலம், மஞ்சள், கறுப்பு, ஊதா
(3) செம்மஞ்சள், மஞ்சள், வெள்ளை,சிவப்பு, ஊதா

35. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கிடையில் பயிரிடக் கூடியது
(1) சீனியாஸ் (2) செவ்வந்தி (3) மல்லிகை

36. ஒருவர் நீரில் மூழ்கிச் செல்லும் ஆபத்தில் உள்ள போது அதனை அவதானிக்கும் மற்றைய நபர் செய்யக் கூடிய செயல்.
(1) ஆபத்து ஏற்பட்டிருப்பதை யாருக்கும் அறிவிக்காமல் இருத்தல்.
(2) நீச்சல் தெரியாமல் இருப்பினும் அவரைக் காப்பாற்றுவதற்காக தான் நீரில் குதித்தல்.
(3) உதவிகோரி சத்தமிடல்.

37. தொற்று நோய்கள் தொற்றுதலைத் தடுப்பதற்கு எம்மால் செய்யக்கூடிய செயலாக அமையாதது.
(1) இருமல், தும்மல் ஆகியன ஏற்படும் போது வாயையும் மூக்கையும் மறைத்துக் கொள்ளல்.
(2) விரைவாக வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளல்.
(3) மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களுக்குச் செல்லுதல்.

38. பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில்..... என்று தொடங்கும் இப்பாடல்..
(1) மீனவர் பாடல் (2) அரிவுவெட்டுப் பாடல் (3) தாலாட்டுப் பாடல்

39. கத்தரிக்கோல், குறடு ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே எவை?
(1) கடதாசிகளை வெட்டுதல், போத்தல் மூடி திறத்தல்.
(2) தாள்களைப் பிணைத்தல், ஆணிகழற்றல்.
(3) துணிகளை வெட்டுதல், கம்பிகளை முறுக்குதல்.

www.ikedu.lk

40. முலையூட்டிப் பிராணியொன்றினை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?
(1) முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும்.
(2) கால்களற்றதாக இருக்கும்.
(3) குட்டியீன்று பால் கொடுக்கும்.

41. கிராமிய விளையாட்டுக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை
(1) பசுவும்புலியும், பல்லாங்குழி (2) கரப்பந்து, கிட்டிப்புள் (3) கிளித்தட்டு, துடுப்பாட்டம்.

42. கலாவெவவைக் கட்டுவித்த மன்னன்.
(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பராக்கிரமபாகு

43. இலங்கையின் அரச இலச்சினையில் சௌபாக்கியம், தார்மீகம் என்பவற்றை குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகள் முறையே
(1) பூவிதழ், தர்மச்சக்கரம் (2) நெற்கதிர், நிறைகுடம் (3) நிறைகுடம், தர்மச்சக்கரம்

44. உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று
(1) உணவு உண்ணும் போது அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு உண்ணுதல்.
(2) மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்த்தல்.
(3) உணவை விழுங்குவதற்கு முன்னர் போதியளவில் அதனை மெல்லுதல்.

45. பச்சை நிறத்தைப் பெறுவதற்கு சமமான அளவில் கலக்கக்கூடிய இரண்டு நிறங்களும் எவை?
(1) நீலமும் மஞ்சளும் (2) நீலமும் சிவப்பும் (3) சிவப்பும் மஞ்சளும்

46. மாலா குடிப்பதற்காக கடையொன்றிலிருந்த பானவகையொன்றை கொள்வனவு செய்தாள். அதன் லேபலில் பச்சை நிற வட்டம் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது அதனால் கருதப்படுவது
(1) சீனி அதிக அளவில் உள்ளது என்பதாகும்.
(2) சீனி குறைந்த அளவில் உள்ளது என்பதாகும்.
(3) சீனி நடுத்தர அளவில் உள்ளது என்பதாகும்.

47. பூவொன்றில் காயாக மாறும் பகுதி எது?
(1) அல்லி (2) குறி (3) சூலகம்

48. ஆவணி, ஐப்பசி ஆகிய மாதங்களில் பூக்கும் தாவரங்கள் முறையே.
(1) வாகை, முருங்கை (2) இலுப்பை, அன்னமுன்னா (3) ஒக்கிட், வேம்பு

49. நீண்ட நாக்கைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கும் பிராணிகளை மட்டும் கொண்ட விடை.
(1) ஆமை, குரங்கு, பல்லி (2) தவளை, பாம்பு, பல்லி (3) தேனீ, வௌவால், ஈசல்

50. பிராணிகள் மூலம் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மையாகக் கருத முடியாதது
(1) மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்.
(2) மல-சலம் தாவரங்களுக்குப் பசளையாதல்.
(3) தாவரப்பகுதிகளை உண்ணுதல்

51. நூலகம் ஒன்றினுள் காட்டக் கூடிய சரியான நடத்தை
(1) சத்தமாகப்பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்
(2) வாசித்த பின் புத்தகங்களை குறித்த இடங்களில் வைத்தல்.
(3) வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்.

52. வீதி சமிக்ஞை விளக்குகளின் தூணில் பச்சை நிற மின்குமிழ் எரியும் போது அதனால் கருதப்படுவது
(1) "வாகனத்தை நிறுத்துக" என்பதாகும்.
(2) "வாகனம் பயணிப்பதற்கு ஆயத்தமாகுக" என்பதாகும்.
(3) "வாகனம் பயணிக்குக" என்பதாகும்.


www.ikedu.lk

53. இரவில் மலரும் மலர்களை மாத்திரம் கொண்டமைந்த விடை
(1) மல்லிகை, முல்லை, அல்லி
(2) இரவுராணி, தாமரை, செவ்வந்தி
(3) நித்தியகல்யாணி, சூரியகாந்தி, அலரி

54. ஈக்களால் பரவக்கூடிய நோய்
(1) மலேரியா (2) அம்மைநோய் (3) கழிச்சல் நோய்

55. வீட்டில் அல்லது பிறிதோர் இடத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டுள்ள ஒரு மின் குமிழ் தாங்கியுடன் மின்குமிழ் ஒன்றினைப் பொருத்தும் போது மிகமுக்கியமாகச் செய்ய வேண்டியது.
(1) பிரதான ஆளியைத் தொடர்பறுப்பது.
(2) மின்குமிழ்கள் அனைத்தையும் தொடர்பறுப்பது.
(3) பாதுகாப்பிற்காக அருகில் ஒருவரை நிற்க வைப்பது.

56. தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்பு




(1) நீர்ச்சுழலி
(2) நீர்ப்பிசாசு
(3) மின்விசிறி

57. நான்காகப் பிரித்த தவாளிப்புள்ள திருகாணிகளை கழற்றிப் பூட்டுவதற்குப் பயன்படும் திருப்புளி வகை எது?
(1) பொதுவான திருப்புளி (2) பிலிப்பு வகைத் திருப்புளி (3) மின் சோதிப்பான்

58. வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பாக நாம் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பழக்கங்களில் ஒன்று.
(1) பாதணிகளைக் கழற்றிய பின் நுழைதல்.
(2) தலைக்கவசம், முகக்கவசம் என்பவற்றை அணிந்தவாறு நுழைதல்.
(3) கை, கால்களை சுத்தம் செய்யாது நுழைதல்.


59. காற்று வீசும் திசையை அறியப் பயன்படும் உபகரணம் பின்வருவனவற்றுள் எது?



(1)



(2)



(3)

60. "எனது செல்லப் பிராணிக்கு நோய் ஏற்பட்ட போது அதனை நான் பராமரித்த விதம்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

i. ……

……

ii. ……

……

iii. ……

……

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

பயிற்சிப் பரீட்சை 5 (15.09.2022)

தரம் 5 **புள்ளித்திட்டம்**

5

வினாத்தாள் I (விடைகள்)

01)	2	11)	1	21)	3	31)	1
02)	3	12)	2	22)	3	32)	3
03)	2	13)	1	23)	2	33)	2
04)	3	14)	3	24)	1	34)	2
05)	2	15)	1	25)	2	35)	2
06)	2	16)	3	26)	2	36)	1
07)	3	17)	2	27)	1	37)	2
08)	3	18)	3	28)	3	38)	3
09)	1	19)	1	29)	1	39)	3
10)	1	20)	1	30)	2	40)	1

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	கோழிக்குஞ்சுகள் / அழகான கோழிக்குஞ்சுகள்	01 புள்ளி
	(ii)	அங்குமிங்கும்	01 புள்ளி
	(iii)	பசுத்தோல் போர்த்த புலி போல	01 புள்ளி
	(iv)	சத்தமிட்டன	01 புள்ளி
	(v)	சிறகுகள் / சிறகுகளை / தோல்	01 புள்ளி
	(vi)	(3) கீரி புல்வெளியில் உலவித் திரிந்தது. (கோடிட வேண்டும்)	01 புள்ளி
02)	நான் கடைக்குச் சென்று புத்தகம் வாங்கினேன்.		01 புள்ளி
03)	ஆத்திசூடியானது எவ்வயதுச் சிறுவர்களும் மனனம் செய்யக்கூடிய வகையில் சிறுசிறு சொற்றொடர்களாக அமைந்துள்ளது.		01 புள்ளி
04)	(i)	நாங்கள் வீட்டிற்குப் போகிறோம்.	01 புள்ளி
	(ii)	அவர்கள் எனது புதிய புத்தகத்தை வாங்கினார்கள்.	01 புள்ளி
05)	மலரவா, நீ வீட்டு வேலைகளைச் செய்தாயா?		01 புள்ளி
06)	(i)	அலைக்கழித்தல்	01 புள்ளி
	(ii)	புண்படுத்தல்	01 புள்ளி
07)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	x	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
08)	ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.		01 புள்ளி

www.ikedu.lk

09)	(i)	மீன்கள் நீரில் வாழும்.	01 புள்ளி
	(ii)	பசுக்கள் பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைத் தரும்.	01 புள்ளி
10)	(i)	வாழ்	01 புள்ளி
	(ii)	இணங்கு	01 புள்ளி
11)	(i)	தாதி	01 புள்ளி
	(ii)	சந்திரன்	01 புள்ளி
12)	(i)	spider	01 புள்ளி
	(ii)	roots	01 புள்ளி
13)	(i)	I work in the paddy field.	01 புள்ளி
	(ii)	We want to buy a shirt.	01 புள்ளி
14)	நூலகம் / நூல் நிலையம்		01 புள்ளி
15)	மட்ட பிட்டு தென்ன		01 புள்ளி
16)	29089		02 புள்ளிகள்
17)	5630, 5603, 5306, 5063		02 புள்ளிகள்
18)	xii		02 புள்ளிகள்
19)	0.4		02 புள்ளிகள்
20)	(i)	3345	02 புள்ளிகள்
	(ii)	597	02 புள்ளிகள்
21)	107		02 புள்ளிகள்
22)	8 225		02 புள்ளிகள்
23)	நான்முகி		02 புள்ளிகள்
24)	வடமேற்கு		02 புள்ளிகள்
25)	6		02 புள்ளிகள்
26)	2		02 புள்ளிகள்
27)	08:30		02 புள்ளிகள்
28)	(i) 330.00 (ii) 210.00 (iii) 162.50 (iv) 555.50		04 புள்ளிகள்
29)	(i)	7 வரை நிழற்ற வேண்டும்.	01 புள்ளி
	(ii)	12	01 புள்ளி

30)	**2**	**36)**	**3**	**42)**	**2**	**48)**	**2**	**54)**	**3**
31)	**2**	**37)**	**3**	**43)**	**3**	**49)**	**2**	**55)**	**1**
32)	**2**	**38)**	**2**	**44)**	**3**	**50)**	**3**	**56)**	**1**
33)	**3**	**39)**	**3**	**45)**	**1**	**51)**	**2**	**57)**	**2**
34)	**1**	**40)**	**3**	**46)**	**2**	**52)**	**3**	**58)**	**1**
35)	**2**	**41)**	**1**	**47)**	**3**	**53)**	**1**	**59)**	**1**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

1 – 15	30 புள்ளிகள்
16 – 29	32 புள்ளிகள்
30 – 59	30 புள்ளிகள்
60	06 புள்ளிகள்
உறுப்பெழுத்து	02 புள்ளிகள்
மொத்தப் புள்ளிகள்	**100**